**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.S.T.C.No. 499/2024**

**Deposition of Witness for Complainant PW3**

**திரு. கண்ணம்மா** **க/பெ. பரமேஷ்**

**வயது. 39** **ஊர். கண்ணேரிமூக்கு**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**13.11.2025** **Witness Signature :**

**PW3 குறுக்கு விசாரணை 11.11 A.M**

1. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேனா? என்றால் அழைப்பானை எதுவும் வரவில்லை. நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க புகார்தாரர் எனது அக்கா என்னை அழைத்து வந்தார். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை நான் சொல்லி தான் தயார் செய்தார்கள். அதில் என்னென்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியும். அதில் எதிரி என்னிடம் குழு பணத்தை ரூ. 1,00,000/– ஐ வாங்கிக்கொண்டு தராமல் இருந்து வந்ததால் நான் பலமுறை கேட்டும் தரவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரிக்கு இந்த பணத்தை ஜூலை மாதம் 2023 ம் வருடம் கொடுத்தேன். தேதி சரியாக ஞாபகமில்லை.

2. நான் பிரமாண வாக்குமூலத்தில் 12.07.2023 ல் கோத்தகிரி காவல் நிலையத்தில் எதிரியின் மீது எனக்கு தரவேண்டிய பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். ஜூலை

மாதம் 1 தேதி முதல் 11 ம் தேதி வரை எந்த தேதியில் காசு கொடுத்தேன் என்றும், எந்தெந்த தேதியில் பணத்தை திருப்பி தர கேட்டேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது அக்கா எதிரிக்கு காசு கொடுத்ததாக சொல்லும் தேதியில் எதிரி என்னிடம் பணம் வாங்கிக்கொண்டு நான் பலமுறை கேட்டும் தரவில்லை. மேற்படி விவரம் எனது அக்கா புகார்தாரருக்கு தெரியாது.

3. நான் என் அக்காவிடம் எதிரி ராணி என்னிடம் வாங்கிய ரூ.1,00,000/- பணத்தை தராமல் ஏமாற்றி வருகிறார் என்றும், அவருக்கு ரூ. 6,00,000/- கடன் கொடுக்கவேண்டாம் என்று சொல்லியிருந்தேன் என்றால் நான் சொல்வதற்கு முன்பே கடன் கொடுத்துவிட்டார். புகார்தாரர் எதிரிக்கு 01.06.2023 ல் பணம் கொடுத்தார். எதிரி பணத்தை வாங்கிக்கொண்டு மேற்படி பணத்தை ஒரு மாதத்தில் கொடுக்கிறேன் என்று ஒரு காசோலையை கொடுத்தார். அந்த காசோலையை யார் எழுதியது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்து கொண்டு எதிரிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த அறிவிப்பில் என்ன விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது.

4. வழக்கறிஞர் அறிவிப்பில் 01.06.2023 ம்தேதியன்று எதிரியிடம் பணத்தை வாங்கிக்கொண்டு ஒரு மாத காலத்தில் திருப்பி தருவதாக வாங்கிக்கொண்டு மேற்படி பணத்தை திருப்பி தராமல் இருந்ததாகவும் கடைசியாக கோத்தகிரியில் வைத்து 06.07.2023 ம் தேதியிட்ட காசோலையை எதிரி புகார்தாரருக்கு கொடுத்தாகவும் சொல்லியுள்ள நிலையில் நான் தாக்கல் செய்த வாக்குமூலத்தில் 01.06.2023 ம் தேதியன்று கடைக்கம்பட்டி கிராமத்தில் எதிரி பணத்தை பெற்றுக்கொண்டு அன்றைய தேதியிலேயே காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் எது உண்மை என்றால் கடைக்கம்பட்டி கிராமத்தில் பணம் கொடுத்தது தான் உண்மை.

5. என் அக்கா அனுப்பியுள்ள அறிவிப்பில் கோத்தகிரியில் காசோலையை

கொடுத்ததாக கூறியுள்ள சங்கதி தவறாகும். புகார்தாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கோத்தகிரி காவல் நிலையத்தில் 12.07.2023 ம் தேதியன்று கொடுத்துள்ள புகாரின் பேரில் எதிரி கோத்தகிரி உதவி ஆய்வாளருக்கு எழுதிக்கொடுத்த கடிதத்தில் கடைக்கம்பட்டி ஊரில் வசிக்கும் ராணி என்பவரிடம் இன்று 12.07.2023 ம் தேதியன்று அன்று காவல் நிலையத்தில் வைத்து ரூ. 40,000/- கொடுத்துள்ளேன். மீதி ரூ. 60,000/- பணத்தை 19.07.2023 ம் தேதியன்று கொடுத்துவிடுகிறேன் என கூறியுள்ளேன். அந்த மனுவில் நான் கையொப்பமிட்டுள்ளேன். எதிரி காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்த மனுவில் உள்ள என்னுடைய **கையெழுத்து எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 13.11.2025**
**Judicial Magistrate,**
**Kotagiri**